# 🌙 நிலாமுற்றம் போட்டி 2026

### (அனைத்து வகுப்புகளுக்கும் பொதுவான விதிமுறைகள்)

நிலாமுற்றம் போட்டி 2026, மாணவர்களின் மொழித்திறன், சிந்தனை வேகம், குழு ஒருங்கிணைப்பு, மேடைத் தன்னம்பிக்கை மற்றும் நேர மேலாண்மை ஆகியவற்றை வளர்க்கும் சிந்தனையில் ஒழுங்கமைக்கப்படுகிறது. இப்போட்டியில் பங்குபெறும் அனைத்து வளாகங்களும் மற்றும் போட்டியாளர்களும் கீழ்வரும் பொதுவான விதிமுறைகளைக் கடைப்பிடித்தல் கட்டாயமாகும்.

## 👥 1. போட்டியாளர்கள் மற்றும் பங்கேற்பு

- ஒவ்வொரு வளாகத்திலிருந்தும் அதிகபட்சம் 4 போட்டியாளர்கள் ஒரு குழுவில் பங்குகொள்ளலாம்.

- மாணவர் எண்ணிக்கை குறைவாக உள்ள வளாகங்கள், அவர்களது கீழ் வகுப்புகளில் இருந்து மேலதிக மாணவர்களை இணைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுகின்றன.

- ஒரு குழுவில் ஒரு வளாகத்திலிருந்து ஆகக் குறைந்தது 2 மாணவர்கள் பங்குபெற வேண்டும். அவ் வயதுப்பிரிவில் வளாகத்தில் 4மாணவர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்தால் மட்டும் இவ் விதிமுறை பொருந்தும்.

- இப்போட்டி அனைத்து வகுப்புகளிலும் முழுமையாகக் குழு விளையாட்டாக நடைபெறும்.

- மேல் வகுப்பில் பயிலும் மாணவர்கள், கீழ் வகுப்புகளுக்காக நடைபெறும் போட்டிகளில் எந்த சூழலிலும் பங்குபெற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

- ஒவ்வொரு மாணவரும் ஒரு குழுவில் மட்டுமே பங்குபெற அனுமதிக்கப்படுவர்.

## 📝 2. பதிவு மற்றும் நிர்வாக ஒழுங்குகள்

• போட்டியில் பங்குகொள்ளும் மாணவர்களின் பெயர், வகுப்பு, வளாகம் உள்ளிட்ட விவரங்களை 21.02.2026 சனிக்கிழமைக்கு முன்பாக கட்டாயமாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

• குறிப்பிட்ட நாளுக்குப் பின்னர் அனுப்பப்படும் பெயர் விபரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

• போட்டியாளர்களைத் தெரிவு செய்யும் போது, வளாகங்கள் பொதுவான நடைமுறைகளைப் பின்பற்றுதல் அவசியம். அதற்கான முழுப் பொறுப்பும் வளாகங்களையே சாரும்.

• குறிப்பாக, அதிக மாணவர் எண்ணிக்கை கொண்ட வளாகங்கள், போட்டியாளர்கள் தெரிவு செய்வது ஒரு சவாலாக அமையக்கூடும் என்பதனைக் கருத்தில் கொண்டு திட்டமிட்டுச் செயல்பட வேண்டும்.

## 🎓 3. போட்டி நடைமுறை

• போட்டியின் சுற்றுகள், கேள்வி வடிவம், நேர வரம்பு மற்றும் புள்ளி வழங்கும் முறை வகுப்புத் தரத்திற்கு ஏற்ப அமையும்.

• போட்டியின் அனைத்து சுற்றுகளும்
நடுவர் குழுவின் கண்காணிப்பின் கீழ் நடத்தப்படும்.

• போட்டியாளர்கள், நடுவர் குழு மற்றும் நடத்துனர்களின் அறிவுறுத்தல்களை முழுமையாகப் பின்பற்ற வேண்டும்.

## 👨‍👩‍👧‍👦 4. பார்வையாளர்கள் மற்றும் ஊக்குவிப்பு

• போட்டியை நேரில் பார்வையிட பெற்றோர்கள் மற்றும் சக மாணவர்கள் வருகை தருவதை நடாத்துனர்கள் ஊக்குவிக்கின்றனர்.

• பார்வையாளர்களின் உற்சாக ஆதரவு, வளாகங்களின் பங்கேற்பு மனப்பாங்கை உயர்த்தி, போட்டி சிறப்பாக நடைபெற உதவும்.

## ⚖️ 5. ஒழுங்குமுறை மற்றும் அதிகாரம்

• போட்டியின் ஒழுங்கான நடைமுறை, எதிர்பாராத சூழ்நிலைகள் அல்லது நேர மேலாண்மை காரணங்களுக்காக, விதிமுறைகள், சுற்றுகள் அல்லது புள்ளி முறைமைகளில் தேவைக்கேற்ப மாற்றம் செய்யும் முழு அதிகாரமும் போட்டி நடத்துனர்களுக்கு உண்டு.

• நடுவர் குழுவின் தீர்மானங்கள் இறுதியானவை மற்றும் மறுக்க முடியாதவை.

• போட்டி நடைபெறும் போது, எந்தவொரு ஒழுங்கீன நடத்தை அல்லது விதிமீறல் இடம்பெற்றால், அந்த வளாகம் அல்லது குழு போட்டியில் இருந்து விலக்கப்படலாம்.

## 🤝 6. ஒத்துழைப்பு மற்றும் பொறுப்பு

• நிலாமுற்றம் போட்டி முதற்தடவையாக இடம்பெறுவதால், அனைத்து வளாகங்களின் முழுமையான ஒத்துழைப்பும் புரிதலும் போட்டி சிறப்பாக நடைபெற அத்தியாவசியமானதாகும்.

• போட்டியாளர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் அனைவரும் இந்த நிகழ்வை ஒரு கல்வி அனுபவமாகக் கொண்டு நல்லிணக்கத்துடன் ஒத்துழைக்க வேண்டும்.

• போட்டியாளர்கள் அனைவரும் பாராட்டப்பட்டு ஊக்கப்படுத்தப்படுவார்கள்.

## 📧 7. தொடர்பு

• போட்டி தொடர்பான கேள்விகள், சந்தேகங்கள் அல்லது விளக்கங்கள் இருப்பின், தயவு செய்து எமது அறிவிக்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்புகொள்ளவும்.

மிகக் குறைந்த கால அவகாசத்தில் இந்த நிகழ்வை திட்டமிட்டு நடத்தும் எமது ஒழுங்கமைப்பு குழுவுடன் நீங்கள் வழங்கும் ஒத்துழைப்பிற்கு எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

✨ உங்கள் ஒத்துழைப்புடன், நிலாமுற்றம் போட்டி 2026 மாணவர்களின் மொழி பயணத்தில் ஒரு முக்கியமான மைல்கல்லாக அமையும் என நம்புகிறோம்.

🙏 **நன்றி.**

**நிலாமுற்றக்குழு - தலைமை நிருவாகம்**
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்**

# 🌙 நிலாமுற்றம் 2026 - விதிமுறைகள் மற்றும் சுற்றுகள்

நிலாமுற்றம் 2026 போட்டி, மாணவர்களின் மொழித்திறன், சிந்தனை வேகம், சொற்களஞ்சியம் மற்றும் குழுப் பண்பு ஆகியவற்றை மேம்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. போட்டி, மாணவர்களின் கல்வியாண்டு அடிப்படையில் மூன்று பிரிவுகளாக நடைபெறும்.

## 🟢 4ம் ஆண்டு நிலாமுற்றப் போட்டி

### 🔹 சுற்று 1: எழுத்துச் சுழற்சி (Terningkast)

• ஒவ்வொரு குழுவிற்கும் ஒரே வடிவிலான பகடைக் கட்டைகள் (Terningkast) வழங்கப்படும்.

• அதை உருட்டி, அதில் வரும் எழுத்துகளைப் பயன்படுத்தி, போட்டியாளர்கள் வழங்கப்படும் தாளில் சொற்களை எழுதவேண்டும்.

• எத்தனை தடவைகள் வேண்டுமானாலும் பகடைக் கட்டையை உருட்ட முடியும். அதன்போது கிடைக்கும் எழுத்துகள் அனைத்தையும் வைத்து வழங்கப்பட்ட நேரத்திற்குள் சொற்களை உருவாக்கலாம். குறிப்பு: ஒவ்வொரு தடவை உருட்டும் போதும் முதல் கிடைத்த எழுத்திற்குரிய சொற்களை நடுவர்குழுவினர் பெற்றுக்கொள்வார்கள். மீண்டும் அந்த எழுத்திற்குரிய சொற்களை எழுதமுடியாது.

• 3 நிமிடங்கள் வழங்கப்படும்.

• சொற்கள் சரிபார்க்கப்பட்டு, சரியான ஒவ்வொரு சொல்லிற்கும் 5 புள்ளிகள் வழங்கப்படும்.

### 🔹 சுற்று 2: முன் எழுத்து நீக்கப்பட்ட சொற்கள்

• 5 எழுத்துகள் கொண்ட சொற்கள் திரையில் ஒவ்வொன்றாகக் காண்பிக்கப்படும்.

• ஒவ்வொரு சொல்லிலும் முதல் எழுத்து நீக்கப்பட்டிருக்கும்.

• அந்தச் சொல் என்ன என்பதை விரைவாகவும் சரியாகவும் கண்டுபிடிக்கும் குழுவிற்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

• முதலில் மணியை அடித்துச் சரியான விடையைக் கூறும் குழு, அதிக புள்ளிகள் பெறும் வாய்ப்பைப் பெறுவர்.

• தவறாக விடையளித்தால் அந்த சொல்லைத் தொடர்ந்து கண்டுபிடிக்க முடியாது. அடுத்த சொல் வரும்வரை காத்திருக்க வேண்டும்.

### சுற்று 3: காலத்தைக் கண்டறிதல்

• 6 சொல்லியங்கள் ஒவ்வொன்றாக திரையில் காட்டப்படும்.

• அதற்கு பொருத்தமான இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனத் தரப்பட்டிருக்கும் அட்டையை விரைவாக எடுத்து, ஓடிச் சென்று திரைக்கு அருகில் இருக்கும் மணியை அழுத்தி அட்டையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

• ஒவ்வொரு சரியான பதிலிற்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

## 5ம் ஆண்டு நிலாமுற்றப் போட்டி

### சுற்று 1: வட்ட எழுத்துச் சொல் விளையாட்டு

• திரையில் ஒரு வட்ட வடிவத்தில் 9 எழுத்துகள் காண்பிக்கப்படும்.

• அவற்றைப் பயன்படுத்தி அதிகமான சொற்களை உருவாக்க வேண்டும்.

• ஒவ்வொரு குழுவும் தங்கள் விடைகளைத் தாளில் எழுத வேண்டும்.

• விடைகள் உடனடியாகச் சரிபார்க்கப்பட்டு, சரியான சொற்களுக்கு 5 புள்ளிகள் வழங்கப்படும்.

### சுற்று 2: கால வேறுபாடு >இறந்த / நிகழ் / எதிர்காலம் கண்டறிதல்

• 10 சொல்லியங்கள் ஒன்றன் பின் ஒன்றாகத் திரையில் காட்டப்படும். அதில் சொல்லியத்தின் முடிவுச் சொல் நீக்கப்பட்டிருக்கும்.

• நீக்கப்பட்ட சொல்லிற்கு சரியான பதிலை வழங்கப்படும் தாளில் எழுதி அதை திரைக்கு அருகில் இருக்கும் மேசையில் அல்லது பலகையில் ஒட்ட வேண்டும்.

• எ.கா.:
அண்ணா நேற்று பாடசாலைக்குச் _______.

- திரையில் காட்டியவுடன் சரியான காலச் சொல்லை எழுதி ஒட்டுதல்,

• பதில் சரிபார்கப்பட்டு சரியான பதிலிற்கு 10 புள்ளிகள் வழங்கப்படும்.

### சுற்று 3: முதல் எழுத்தைக் கண்டறிக

• ஒரே நேரத்தில் 5, 4, 3, 2 எழுத்துகள் கொண்ட சொற்களில் முதல் எழுத்து நீக்கப்பட்டு திரையில் காண்பிக்கப்படும்.

• அனைத்து சொற்களும் ஒரே எழுத்தில் தொடங்கும்.

• தவறாக விடையளித்தால் அந்த சொல்லைத் தொடர்ந்து கண்டுபிடிக்க முடியாது. அடுத்த சொல் வரும்வரை காத்திருத்தல் வேண்டும்.

• மணியடித்து சரியான பதில் வழங்கும் ஒவ்வொரு குழுவிற்கும் 15 புள்ளிகள் கிடைக்கும்.

## 11ம் ஆண்டு நிலாமுற்றப் போட்டி

### சுற்று 1: எழுத்து மாறிய சொற்கள்

• 6 எழுத்துகள் கொண்ட சொற்கள் வழங்கப்படும்.

• அந்தச் சொற்களின் எழுத்துகள் மாற்றப்பட்டிருக்கும்.

• அது என்ன சொல் என்பதை விரைவாகக் கண்டுபிடிக்க வேண்டும்.

• முதலில் மணியை அடித்துச் சரியான விடையை கூறும் குழுவிற்கு 5 புள்ளிகள் வழங்கப்படும்.

### சுற்று 2: எழுத்து உதவியுடன் சொல் கண்டுபிடித்தல்

• 5 எழுத்துகள் கொண்ட சொற்கள் திரையில் ஒவ்வொன்றாக காண்பிக்கப்படும்.

**எ.கா.: வ _ கா _ _**

• முழுச் சொல்லை உடனே கண்டுபிடித்தால் முழுப் புள்ளிகள்.
முடியாவிட்டால்:

• ஒவ்வொரு கட்டமாக ஒரு எழுத்து உதவி வழங்கப்படும்.

• ஒவ்வொரு எழுத்து வழங்கும் போதும் புள்ளிகள் குறைவடையும்.

• முதலில் மணியை அழுத்தி அல்லது கையை உயர்த்திப் பதிலளிக்கும் குழுவிற்குப் புள்ளிகள் அதிகமாக கிடைக்கும் வாய்ப்புள்ளது.

• விரைவான சரியான விடைக்கு 15 புள்ளிகள், 10 புள்ளிகள், 5 புள்ளிகள் என புள்ளிகள் குறைவடைந்து செல்லும். ஆயினும் தவறாக பதில் அளித்தால், அந்த சொல்லைத் தொடர்ந்து கண்டுபிடிக்கும் வாய்ப்பை இழந்து விடுவீர்கள்.

### 🔹 சுற்று 3: பழமொழி, திருக்குறள் கண்டறிதல்

• ஒவ்வொரு குழுவிற்கும் இரண்டு பெட்டிகள் வழங்கப்படும், அதில் ஒரு பெட்டியில் பழமொழிகள் பிரிக்கப்பட்டு சொற்கள் கலந்து இருக்கும். அவ்வாறே மற்றைய பெட்டியில் திருக்குறள்கள் பிரிக்கப்பட்டுச் சொற்கள் கலந்திருக்கும்.

• 5 பழமொழிகள் மற்றும் 5 குறள்களும் தனித்தனியான பெட்டிகளில் இருக்கும்.

• இச்சுற்றிற்கான போட்டி நேரம் தொடங்கியதும் கண்டு பிடித்த பழமொழி அல்லது குறள் எதுவாக இருப்பினும் திரைக்கு முன்னால் உள்ள பலகையில் அல்லது மேசையில் ஒட்ட வேண்டும்.

• சரியான ஒவ்வொரு விடைக்கும் 15 புள்ளிகள் வழங்கப்படும்.

• 5 நிமிடங்கள் வழங்கப்படும். நேரத்திற்கு முன்னர் ஏதாவது ஒரு குழு, விளையாட்டை முடித்தால், உடனடியாக அனைத்துக் குழுவினருக்கான நேரம் நிறைவடையும்.

### ✨ நிலாமுற்றத்தின் அடைவு

நிலாமுற்றம் நிகழ்வு, மாணவர்களின்

- மொழித்திறன்
- சிந்தனை வேகம்
- குழு ஒருங்கிணைப்பு
- மேடைத் தன்னம்பிக்கை

ஆகியவற்றை வளர்க்கும் வகையில் மிகச் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ஒரு சொற்போட்டியாக அமையும்.

**நிலாமுற்றக்குழு - தலைமை நிருவாகம்**
**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம்**